செயலாளரும் செல்வதாக இருக்கிறார். இதற்கு மேலும் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை கூறினால் அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊ) மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் விடாமை.

திரு. சு. முத்துசாமி கரையாளர்: பேரவைத் தலைவரவர்களே, " திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்துக்கு குறித்த காலத்தில் போதிய அளவு தண்ணீர் கொடுக்காததால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டது குறித்து "

மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து ஒரு மதகுக் கால்வாய் மூலமாகப் பெருங்கால் ஆயக்கட்டுக்குப் பாசனம் அளிக்கப்படுகிறது. இந்தக் கால்வாயின் கீழ்ப்பகுதியான ஆயக்கட்டின் பரப்பு 2,590 ஏக்கர். இதில் 1,209 ஏக்கர் நேரடிப் பாசனத்தின் கீழ் உள்ளது. 1,381 ஏக்கர் கால்வாயிலிருந்து நீரைப் பெறுகின்ற ஏரிகள் மூலமாகப் பாசனம் பெறுகிறது.

நடப்புப் பாசனப் பருவக் காலத்தின் போது ஜூன் திங்கள் முதல் நாளிலிருந்து தொடர்ந்து ஆயக்கட்டுக்குப் பாசனம் அனுமதிக்கப்படுகிறது. குறுவைப் பயிரின் கீழ் 1,148 ஏக்கர் நேரடியாகப் பாசனம் பெற்றும் 1,284 ஏக்கர் ஏரிகளின் மூலம் பாசனம் பெற்றும் பயிரிடப்பட்டன. ஜூன் திங்களில் இக்கால்வாயில் முழு அளவில் நீர் வழங்கப்பட்டது. தென் மேற்குப் பருவ மழை பொய்த்த காரணத்தால் ஜூலை மாதத்தில் இரண்டாவது மூன்றாவது வாரங்களிலும், ஆகஸ்ட் மாதத்தில் முதல் வாரத்திலும் நீர்த்தேக்கத்திற்கு வந்த நீர்வரத்து மிகக் குறைவாக இருந்தது. எனவே, பாசனத்திற்கு நீர் வழங்குவதை நியாயமான விதத்தில் முறைப்படுத்த வேண்டியிருந்தது. இவ்வாறு பருவ மழை பொய்த்த காரணத்தால் தாம்பிரபரணி பாசன ஏற்பாட்டின் கீழுள்ள ஆயக்கட்டும் கூட பாதிக்கப்பட்டது என்பதையும் அதற்காக அங்கே பயிரிடப்பட்டிருந்த பயிர்களுக்குத் தொடர்ந்து பாசனம் அளிக்கும் பொருட்டு மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து நீர் வழங்கி உதவ வேண்டியதாயிற்று என்பதையும்

[திரு. ப. குழந்தைவேலு] [1978 செப்டம்பர் 14

இங்கு குறிப்பிட வேண்டும். தாம்பிரபரணி பாசன ஏற்பாடு பெருங்கால் ஆயக்கட்டு ஆகியவை போன்ற பெரிய அளவிலான ஆயக்கட்டுகளுக்கு அளிக்க வேண்டிய பாசன நலனைக் கருத்தில் கொண்டு பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் அனைத்தையும் காக்கும் பொருட்டு மேற் சொன்னது போல நீர் வழங்குவதை நியாயமான வீதத்தில் முறைப்படுத்துதல் வேண்டியதாயிற்று. ஆகஸ்ட் 12-ம் நாள் முதல் நிலைமை சீரடைந்துள்ளது. இப்போது பெருங்கால் கால்வாயில் போதுமான அளவிற்கு நீர் விடப்படுகிறது. நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் மட்டம் பொறி மதகின் அடிப்புறத் தவணைக்கும் (Sill of the sluice) கீழே போய்விட்டபோதிலும்கூட இயல்பாகக் கிடைக்கின்ற நீர்வரத்து, சாதாரணமான நடமுறையை ஒட்டி பணி முத்தாறு அணையின் மேற்கு பகுதியில் பிரிந்து செல்கின்ற இக்கால் வாயின் பழைய பாதையின் மூலமாக விடப்படுகிறது. இத்தகைய நிலைமைகளில் இந்தக் கால்வாயின் கீழுள்ள அனுமதிக்கப்பட்ட ஆயக்கட்டிலுள்ள பயிர்கள் வாடிவிடவில்லை. அவை பாசனம் பெற்று அறுவடைக்குத் தகுதியான நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தென்மேற்குப் பருவ மழை அப்பகுதியில் பொய்த்த போதிலும் நீர்தேக்கத்திலுள்ள நீர் நிலைமை மிகக் குறைந்திருந்த போதிலும் முடிந்த அளவு பெருங்கால் கால்வாயின் கீழுள்ள ஆயக்கட்டு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கப்படவில்லை. இந்த ஆயக்கட்டில் பாசனம் பெறுவதற்குத் தகுதியாயுள்ள நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் முடிந்த அளவு பாதுகாக்கப்பட்டன.

திரு. சு. முத்துசாமி கரையாளர்: பணிமுத்தாறு தேக்கத்திலிருந்து பெருங்கால் பாசனத்திற்குத் தண்ணீர் செல்லாததன் காரணமாக 200 ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தீர்மானம் கொண்டு வந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலில் பயிர் வாடவில்லை என்று கூறி இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பயிர்கள் பட்டுப்போய்விட்டன. இந்த நிலை வரக்காரணம், அந்த நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு விடக்கூடிய தண்ணீரை வேறு ஒரு தொழிற்சாலைக்குக் கொடுப்பதால் தான் இந்த நிலை ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தப்பாசனத்திற்குத் தண்ணீர் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தென் மேற்குப் பருவ மழை பொய்த்த காரணத்தால் ஜூலை மாதத்திலே 2-வது, 3-வது வாரங்களிலும் ஆகஸ்டு மாத முதல் வாரத்திலும் நீர்த்தேக்கத்திற்கு நீர் வரத்துக் குறைந்து

1978 செப்டம்பர் 14] [திரு.ப.குழந்தைவேலு]

விட்டது. அவ்வாறு குறைந்த காரணத்தால் பாசனத்திற்கு நீர் வழங்குவதை நியாயமான விதத்திலே டர்ன் சிஸ்டம் என்ற வகையிலே முறைப்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பயிர் வாடவில்லை, பயிர் பட்டுப்போய்விட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பயிர் வாடாமல் எப்படிப் பட்டுப்போகும் என்று எனக்குத் தெரியவில்லை. பயிர்களைப் பாதுகாப்பதற்காக வேளாண்மைத் துறை பொறுப்பாகவும் அதேபோல் பாசனத் துறை பொறுப்பாகவும் இந்த அரசும் பொறுப்பாகவும் இருப்பதால் அவைகள் பட்டுப்போகாத நிலையில் மீண்டும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(எ) கல்லணையிலிருந்து பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, "மேட்டூர் அணையில் நீர் நிரம்பிய நிலையிலும், பட்டுக்கோட்டை பகுதி கிருஷ்ணபுரம், பழவேற்காடு, ஒதியடிக்காடு, தம்பிக்கோட்டை மேற்கு, தம்பிக்கோட்டை வடக்கு, கல்யாணஓடை, அத்திவெட்டி கிராமங்களில் தண்ணீர் கிடைக்காத காரணங்களால் நாற்றங்கால்கள் பாழடைந்து சாகுபடி வேலைகள் சீர்குலைந்துவிட்ட காரணத்தாலும் அக் கிராமங்களில் உள்ள விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம் நடத்தப் போகும் நிலையில் அப்பகுதியிலுள்ள பதட்ட நிலையை குறித்த" பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கல்லணை பாசனத்திற்கு திறந்த நாள் முதல் கல்லணைக் கால்வாயில் முழு அளவு பாசன நீர் விடப்படுகிறது. மேலே சொன்ன கிராமங்களுக்குப் பாயும் வாய்க்கால்களில் பாசன நீர் கடைமடைப் பகுதி வரை சென்று கொண்டிருக்கிறது. எனினும் இப்பகுதியில் வறட்சி மற்றும் மழையின்மையால், நாற்று நடவு, துரிதமாக நடப்பதற்கு பாசனத் தண்ணீர் போதுமானதாக இல்லை. ஆனால், தற்போது பெய்த மழை அனுசரணையாக இருப்பதால் நாற்று நடவு வேகமாக நடப்பதற்கு தற்போது கிடைக்கும் பாசன நீர் போதுமானதாக உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, கல்லணைக் கால்வாய் விஷயமாகவும், வடவாறு விரிவாக்கக் கால்வாய் விஷயமாகவும் 9—9—1978 ஆம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். அங்கே இருக்கின்ற வடிகால் பிரச்சினை பட்டுக்கோட்டை தாலுகா,